[19th August 1960

All-India Adivasis' Conference

*311 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு மே மாதம் உதகையில் நடந்த அகில இந்திய ஆதிவாசிகளின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சர்க்காருக்கு கிடைத்தனவா?

(ஆ) அப்படியானால் அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) மாநாட்டிற்காக சர்க்கார் செலவிட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN : (அ) Not yet received.

(ஆ) Does not arise.

(இ) The Government have permitted an expenditure up to a ceiling of Rs. 5,125 (rupees five thousand one hundred and twenty-five only).

9-00 a.m. SRI S. M. ANNAMALAI : சர்க்கார் ஆதிவாசி மாநாட்டை நடத்தியதுபற்றி இவ்வாறு மலையில் வாழும் ஏறத்தாழ 25,000 ஆதிவாசி மக்களுக்கு ஒன்றும் தெரியாது. ஏன் அரசாங்கம் அவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கக் கூடாது?

THE HON. SRI P. KAKKAN : ஆதிவாசி மாநாட்டை சர்க்கார் நடத்தவில்லை. பாரதிய ஆதிவாசிகள் சங்கம்தான் அந்த மாநாட்டை நடத்தியது என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. M. ANNAMALAI : அப்படி நடத்தப்பட்ட மாநாட்டுக்கு சர்க்கார் ஏன் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு செலவழிக்க வேண்டும்? அதற்கு என்ன காரணம்?

THE HON. SRI P. KAKKAN : ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் எத்தனையோ நன்மைகள் செய்கின்றது. அதன்படி, அவர்கள் நன்மைக்காக மாநாடு நடத்தினால் அதற்கும் அரசாங்கம் உதவி செய்ய முன்வருகிறது.

Gypsies

*312 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே எத்தனை நரிக்குறவர்கள் இருக்கிறார்கள்?

(ஆ) இவர்களுள் எத்தனை பேர்களுக்கு அரசாங்கம் வசதி செய்து கொடுத்துள்ளது?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (ஆ) The information is being collected and will be placed on the table of the House as soon as possible.